செ.கு.எண். 47

நாள் 18.03.10

ஒரு வார இதழில் **"குடிநீர் வடிகால் வாரியத்துக்கு மூடுவிழாவா ?"** என்ற தலைப்பில் திரு.கே.கே.என்.ராஜன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஏ.ஐ.டி..யு.சி. சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் அவர்களின் பேட்டியுடன் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதன் மீது வாரியத்தின் குறிப்புரை கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1971ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக உள்ள அனைத்து கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கு தட்டுப்பாடற்ற பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் துவக்கப்பட்டது.

15.02.2010ஆம் நாளிட்ட தமிழக அரசு ஆணை எண்.34 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறையின் மூலம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கு மட்டும் நூற்று வீத கட்டணம் ஒரே சீராக 5 சதவீதம் என நிர்ணயம் செய்து அதே வேளையில் குறைந்த பட்ச தேவை திட்டத்திற்கு தற்பொழுது விதிக்கப்படும் 13 சதவீதம் நூற்று வீத கட்டணமே தொடரும் என தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது

எனவே 5 சதவீதம் நூற்று வீத கட்டணம் அனைத்து திட்டங்களுக்கும் பொருந்தும் என பத்திரிக்கையில் எழுதியிருப்பது உண்மைக்கு மாறானது

இந்தியா குடியரசாகி 50–வது ஆண்டு பிறந்ததையொட்டி அறிவிக்கப்பட்ட பொன்விழா ஆண்டின் சிறப்பு திட்டமான நகர்புறங்களுக்கான பொன்விழா திட்டங்களுக்கு மட்டும் 12.5 சதவீதம் நூற்று வீத கட்டணமாக அறிவிக்கப்பட்டது,

அரசு தனது 04..12.2003ஆம் நாளிட்ட ஆணை எண்.204./நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை, இல் வாரியம் நிறைவேற்றி வரும் திட்டங்களின் மதிப்பின் அளவு அதிகரிப்பினால் வாரியத்திற்கு உண்டான நூற்று வீத கட்டணத்தை ஆய்வு செய்து 2002–03 மற்றும் 2003–04ஆம் ஆண்டிற்கு குறைந்த பட்ச தேவை

1995ல் திட்டங்கள் நிறைவு பெற்றவுடன் இப்பணியாளர்கள் பிற இடங்களில் தேவைக்கு ஏற்ப பணி அமர்த்தப்பட்டு பணி பாதுகாப்பு வழங்கப்பட்டது. பின்னர் பணி ஓய்வினால் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புதல் மற்றும் ஆயத்த செயல்பாட்டு முறை பின்பற்றுதல், மற்றும் கணினி மயமாக்குதல் மூலம் ஏற்பட்ட சிக்கன நடவடிக்கைகளால் பணியாளர்களுக்கு பாதிப்பின்றி திட்டங்கள் வாரியத்தால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தேவைக்கு ஏற்ப 01.08.2006ல் 856 பணியாளர்கள் கால முறை ஊதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தவிர 119 பணியிடங்கள் 7 நிலநீர் ஆய்வாளர் பதவிகள் நிரப்பபட்டுள்ளன. தகுதி வாய்ந்த 60 கீழ் நிலைப் பணியாளர்கள் ஓட்டுநராக பணி நியமன மாற்று முறையில் பணி அமர்வு செய்யப்பட்டு பணிபுரிகின்றார்கள். மேலும் ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு ஒதுக்கீட்டில் 33 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 50 இளநிலை உதவியாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 67 உதவிப் பொறியாளர்கள் பணி மாற்று அடிப்படையில் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தட்டச்சர்கள் 30 நபர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 30 நபர்களும் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு காலி பணியிடங்களை பூர்த்தி செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.616 கோடியில் ஒரு தலைமைப் பொறியாளர் இரண்டு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் மற்றும் 5 கோட்ட அலுவலகங்கள் துவக்கப்பட்டு திட்டப் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர் ஆதாரங்களை கண்டறிந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒரு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் மற்றும் துணை மேற்பார்வை பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு பணிகள் செவ்வனே நடைபெற்று வருகிறது.

தமிழ் நாட்டில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் என்ற அடிப்படையில் 4

திட்டங்களுக்கு நூற்று வீத கட்டணம் 13 சதவீதம் என நிர்ணயித்தது. இதனால் கடந்த ஏழு ஆண்டுகளில் குறைந்த பட்சத் தேவை திட்டங்களைப் பொறுத்த வரையில் நூற்று வீத கட்டண வரவில் குறைவு சராசரியாக ரூ. 21.72 கோடி ஆகிறது. .

பாதாள சாக்கடைத் திட்டத்தை பொருத்த வரையில் இதன் செயலாக்கம் ஆயத்த செயற்பாட்டு முறையில் நிறைவேற்றி வருவதாலும் இத்திட்டங்களுக்கான கோட்டங்களின் நிர்வாகச் செலவினையும் கருத்தில் கொண்டு நூற்று வீத கட்டணம் 5 சதவீதம் ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதன் திட்ட செலவினம் குறைவான அளவே உள்ளது,.

சட்ட மன்ற உறுப்பினர் நிறைவேற்றும் பணிகளுக்கு 13 சதவீதம் நூற்று வீத கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஸ்வஜல்தாரா திட்டங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு இந்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்ட வழிகாட்டுதலைப் பின்பற்றி நூற்று வீத கட்டணம் வசூலிப்பதில்லை.

தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வரும் சுனாமி திட்டங்களுக்கு நூற்று வீத கட்டணம் வசூலிப்பதில்லை. எனினும் இதற்குண்டான நிர்வாகச் செலவு தமிழக அரசால் ஈடு செய்யப்படுகிறது.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் முழுமைக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நூற்று வீத கட்டணம் 13 சதவீதம் ஆகும். எனவே இத்திட்டத்தை பொறுத்த வரை நூற்று வீத கட்டண குறைப்பு ஏதும் இல்லை. .

1984 ஆம் ஆண்டு முதல் 1995 வரை உலக வங்கியின் நிதி உதவியுடன் திட்டங்களை நிறைவேற்ற மாநில அளவில் கோயமுத்தூரை தலைமையிடமாக கொண்ட மண்டலம் மற்றும் வட்ட அலுவலகங்கள் மற்றும் கோட்டங்கள் இயங்கி வந்தன. இது வாரிய ஊழியர் எண்ணிக்கையில் ஏறத்தாழ 6–ல் ஒரு பங்கு ஆகும்.

மேற்பார்வை பொறியாளர்கள் உருவாக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒக்கேனக்கல் கூட்டு குடிநீர் திட்டப் பணிகளை செவ்வனே நிறைவேற்ற தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையில் தனியாக அலுவலகம் தர்மபுரியில் துவக்கப்பட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஒரு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் மற்றும் 2 கோட்ட அலுவலகங்களும் இத்திட்டத்திற்காக இயங்கி வருகின்றது. இதைத் தவிர 3 கோட்ட அலுவலகங்கள் விரைவில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

02.12.2009ல் வாரியத்தின் நிர்வாகச் செலவு அதிகரிப்பின் காரணமாக ஏற்படும் நிதிச் சுமையினை கருத்தில் கொண்டு நகர்புற மற்றும் ஊரக உள்ளாட்சி மன்ற திட்டங்களுக்கு தற்பொழுது நடைமுறையில் உள்ள சதவீதத்தையே தொடர (அல்லது) நூற்று வீத கட்டணத்தை ரத்து செய்து விட்டு வாரிய நிர்வாகச் செலவுகளை அரசு ஈடு செய்ய தமிழக அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இதனை ஆய்வு செய்த தமிழக அரசு, குறைந்த பட்ச தேவை திட்டங்களுக்கு நூற்று வீத கட்டணம் 13 சதவீதம் எனவும் அனைத்து நகர்புற திட்டங்களுக்கு நூற்று வீத கட்டணம் 5 சதவீதம் எனவும் நிர்ணயித்து ஆணை பிறப்பித்தது.. எனினும் அரசு தனது 24.02.2010 நாளிட்ட கடிதத்தில் மேற்கூறிய அரசாணையை செயல்படுத்துவதால் வாரியத்திற்கு ஏற்படும் நிதி இழப்பினை ஈடு கட்ட நடவடிக்கை எடுக்க கருத்துரு ஒன்றினை அனுப்பும்படி கோரியுள்ளது. . இதன்படி புதிய ஊதியக் குழுவின் ஊதிய விகிதத்தை அமுல்படுத்தியதால் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களில் கூடுதல் சுமை, நூற்று வீத கட்டண குறைப்பினால் ஏற்படும் வீத வரவில் குறைவு, மற்றும் குடிநீர் கட்டண கேட்பு வசூலில் உள்ளாட்சி மன்றங்களின் நிலுவை ஆகியவற்றை கருத்தில் கொண்டு வாரியத்தின் நிதி நிலையை விளக்கி 03.03.2010இல் தமிழக அரசிற்கு கருத்துரு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இக் கருத்துரு தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

4/4

k. [signature] 18.3.2010

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்காக,
தகு..வ..வாரியம், சென்னை 600 005

[initials] 18/3/10